LIFESAVING SOCIETY®
*The Lifeguarding Experts*

அன்புள்ள பெற்றோர்/பாதுகாவலருக்கு,

அண்மையில், த லைஃப் சேவிங் சொசைட்டியின் ***Swim to Survive***® திட்டத்தை உங்கள் பிள்ளை பாடசாலையில் பூர்த்திசெய்துள்ளார்.

எதிர்பாராமல் ஆழமான நீருக்குள் விழநேர்ந்தால், உயிர் பிழைக்கத் தேவையான மூன்று முக்கியமான திறமைகளுக்கான பயிற்சியை *Swim to Survive* வழங்குகிறது.

தண்ணீருக்கருகில் பாதுகாப்பாக இருக்க Swim to Survive முக்கியமான ஒரு படியாகும். இது பாரம்பரிய நீச்சல் வகுப்புகளை மாற்றீடு செய்யாது.

பின்வரும் திறண்களில், தனது திறமையின் அளவைக் காட்டும் *Swim to Survive* சான்றிதழ் ஒன்று உங்கள் பிள்ளைக்கு வழங்கப்பட்டிருக்கும்:

- ***ஆழமான நீருக்குள் உருண்டு விழ இயலும்***
- ***1 நிமிடத்திற்கு தண்ணீரில் கை கால்களை அடிக்க இயலும்***
- ***____ மீட்டர்களுக்கு நீந்த இயலும்***
- ***Swim to Survive தராதரத்தை எட்டியுள்ளார் (ஒரு தொடர் வரிசையில் 3 திறன்கள்)***
- ***Swim to Survive தராதரத்தை எட்டவில்லை***

சான்றிதழில் குறிக்கப்பட்டது எதுவாக இருந்தாலும், இந்த குறைந்தபட்ச தராதரத்தையும் தாண்டி ***எல்லாப்*** பிள்ளைகளும் நீச்சல் கற்றுக்கொள்ள வேண்டுமென த லைஃப் சேவிங் சொசைட்டி உற்சாகப்படுத்துகிறது. *உங்கள் பிராந்தியத்தில் எங்கே, எப்படி நீச்சல் வகுப்புகளுக்குப் பதிவுசெய்வது என்பதைத் தெரிந்துகொள்ள தயவுசெய்து பிள்ளையின் சான்றிதழின் பின்பக்கத்தைப் பார்க்கவும்.*

தகுதிபெறும் குடும்பங்கள் மேலதிக நீச்சல் திட்டங்களைப் பெற்றுக்கொள்ள நிதி உதவிகளை பல நீச்சல்க் குளங்கள் வழங்குகின்றன. மேலதிக தகவலுக்கு உள்ளூர் நீச்சல் குளத்தை தொடர்புகொள்ளவும்.

ஒன்-லைனில் திட்டத்தை மதிப்பீடு செய்யலாம். உங்களுடைய கருத்துக்கள் மிகவும் மதிப்புடையதாக கருதப்படும். இந்த மதிப்பீட்டை செய்வதற்கு தயவுசெய்து, த லைஃப் சேவிங் சொசைட்டியின் www.lifesavingsociety.com இல் Swim to Survive வலைப் பக்கத்தின் "பேரன்ட் மட்டீரியல்ஸ்" க்குச் செல்லவும்.

இந்த, உயிர் பிழைப்பதற்கான பயிற்சித் திட்டம் பற்றிய மேலதிக தகவல் அல்லது கேள்விகள் உங்களுக்கு இருந்தால் 416-490-8844 என்ற இலக்கத்தில் என்னைத் தொடர்புகொள்ள தயங்கவேண்டாம் அல்லது swimtosurvive@lifeguarding.com க்கு ஈமெயில் அனுப்பவும்.

உண்மையுள்ள,

பொதுக் கல்வி ஒருங்கிணைப்பாளர்

Reg. Charity No. 10809 7270 RR0001

400 Consumers Road
Toronto, Ontario M2J 1P8 Canada

**தொலைபேசி: 416-490-8844**
**தொலை நகல்: 416-490-8766**
**ஈமெயில்: experts@lifeguarding.com**
**www.lifesavingsociety.com**